Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2020 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW13 ( LW18 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சிலைமணி | Village | இராமநாதபுரம் |
| Father/ Husband Name | கரும்பன் | Taluk | இராமநாதபுரம் |
| Age | 61/2026 | Calling | ஆய்வாளர்(ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 07.00 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.06.2019 ம் தேதி கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் மாரியம்மாள் பணியில் இருந்தபோது 10.00 மணிக்கு நிலையப் பொறுப்பிலிருந்தபோது தம்பி மகன் ஜெயன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பார்வையிட்டு புகாரின் தன்மைக்கேற்ப எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 394 கீழ் குற்ற எண் 179/19– ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் மீது முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு சம்பவம் இடத்திற்கு அன்றைய தினமே சென்று சாட்சிகள் சக்திவேல், கணேசன் ஆகியோர் முன்னிலையில் பாா்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, பின்னர் சாட்சிகள் கல்யாணி, பார்த்தசாரதி, முதல் நிலை காவலர் கார்த்திக், சக்திவேல், கணேசன், சார்பு ஆய்வாளர் மாரியம்மாள் ஆகியோர்களை விசாரணை செய்து 30.07.2019–ம் தேதி 16.30 மணிக்கு கம்பம் மெட்டு ரோடு பழைய போலிஸ் செக் போஸ்ட் அருகே இவ்வழக்கின் எதிரியான அஜித்ரகுமான் என்பவரை கைது செய்து சாட்சிகள் கல்யாணி, பார்த்தசாரதி அவர்கள் முன்னிலையில் மேற்படி நபரின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து வாக்குமூலத்தின் அடிப்படையில் 15.45 மணிக்கு அவர் ஆஜர் செய்த TN 63 F 1192 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி மூலம் எதிரியையும், வாகனத்தையும் கைப்பற்றி நீதிமன்ற காவலுக்கு ஆய்வாளர் பொன்னிவளவன் அவர்கள் உட்படுத்தினார். அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டார் நான் பணிமாறுதலில் கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் பொறுப்பேற்று இந்த வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கில் காயம்பட்ட அ.சா.1, 2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதீப் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலத் பதிவு செய்து காயச்சான்றிதழ்கள் பெற்றேன். இந்த வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரிகளான சையது முகமது, ஹபீப் முகமது, முகமது இர்பான் ஆகிய எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்பு இவ்வழக்கின் 10.05.2020–ம் தேதி வழக்கின் சம்பவத்திற்கு பயன்படுத்திய மஞ்சள்

கலர்மோட்டார் சைக்கிளை கைப்பற்றப்படாமல் இருந்தது அதனை சாட்சிகள் முதல்நிலை காவலர் அருண், காவலர் மணிமுத்து ஆகியோருடன் ரோந்து பணியில் ஈடுபட்ட போது, கம்பம்– கம்பமெட்டு ரோடு அருகே மொகைதீன் பள்ளி வாசல் அருகே IOB ATM வாகனங்களை தணிக்கை செய்த போது மேற்படி மஞ்சள் கலர் வாகனத்தில் நம்பளர் பிளேட் இல்லை. அந்த வாகனத்தின் பெட்ரோல் டேங்க் கவரினை பரிசோதனை செய்த போது TN 60 AZ 0300 என்றும் உரிமையாளர் பெயர் இவ்வழக்கின் எதிரியான முகமதுஇர்பான் என்றும் RC –ல் குறிப்பிடப்பட்டுயிருந்தது. இந்த வழக்கில் தேடப்பட்டுக்கொண்டிருந்த வாகனம் என்பதால் என்னுடன் வந்த போலிஸ் பார்டியான முதல்நிலை காவலர் அருண், காவலர் மணிமுத்து ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி மூலம் அதனை கைப்பற்றி நிலையம் வந்து படிவம் 91 தயார் செய்தேன். மேலும்சாட்சிகள் ஜெகன், ரிஜு ஆகியோர்களை விசாரணை செய்து மறுவாக்குமூலும் பதிவு செய்தேன், மேலும் முதல்நிலை காவலர் அருண், காவலர் மணிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.05.2020ம் தேதி எதிரி சையது முகமது நீதிமன்ற காவலில் இருந்தவரை உரிய நீதிமன்ற அனுமதி பெற்று Police custody எடுத்தேன். அவரை விசாரிக்க 15.30 மணிக்கு சாட்சிகள் முருகன், பெரியசாமி முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார், அதனை பதிவு செய்தேன். பின்பு அதன் படி 17.45 மணிக்கு கம்பம் மெட்டு ரோடு அடிவாரத்தில் உள்ள செட்டில்கார்க் அருகே உள்ள செடி புதரில் இருந்த வழக்கிற்கு பயன்படுத்திய உருட்டு கட்டையை அதே சாட்சிகள் முன்னிலையல் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். பின்பு சாட்சிகள் பெரியசாமி, முருகன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.14**, பார்வை மகஜர் **அ.சா.ஆ.15,** வரைபடம் **அ.சா.ஆ.16**, எதிரி அஜித்ரகுமான் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.17,** எதிரி சையது முகமது என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.18** அத்தாட்சிகள் முறையே , **அ.சா.ஆ. 19,20,21** படிவம் –91 (எண்ணிக்கை –3) **அ.சா.ஆ. 22** உருட்டு கட்டை **சாபொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் உருட்டு கட்டை வழக்கு சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கொள்ளையடிக்கப்பட்டதாக சொல்லப்படும் பணம் மற்றும் செல்போன் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் விபத்து பதிவேட்டில் கையாலும், இரும்பு கம்பியாலும் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதனை கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி அஜித்ரகுமாரனை கைது செய்த பின்பு சாட்சிகள் 1, 4 (LW1, 2) மூலம் அடையாளம் கண்டுக்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான், கொரோனா காலம் என்பதால் சாட்சிகள் அவர்களின் மாநிலத்தில் இருந்த வரயியலவில்லை. எதிரிகள் குறித்து அடையாள அணிவகுப்புநடத்தப்படவில்லை என்றால் சரிதான். எதிரி

அஜித்ரகுமாரனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் அவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எதிரி அஜித்ரகுமாரனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் அவருக்கு சொந்தமானது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1, 4 இவ்வழக்கு சம்மவத்திற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. உருட்டு கட்டை, 2–வதாக கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனம் ஆகியவற்றிற்குரிய இடங்களின் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.3 சக்திவேல் கையொப்பம் செய்த ஆவணத்தில் எழுதப்பட்ட ஆவணத்தின் விபரம் தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகள் செல்வகுமார், திருப்பதி, பார்த்தசாரதி, பெரியசாமி ஆகியோர்களை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் இருசக்கர வாகனத்தின் பெட்ரோல் டேங்க் கவர் இல்லை என்றாலும், கவர் இருந்ததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கு சம்மந்தமில்லாத வழக்கினை அவர்கள் மீது பொய்யாக புனைந்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.